# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## C.C.No.137 /2022

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திரு.வேல்முருகன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வேல்முருகன் | வயது | : | 50 /26 |
| த/பெ/ க.பெ./ | : | தங்கராசு | தொழில் | : | **தனியார் வேலை** |
| ஊர் | : | **கோடங்குடி** | நிலை | : | LW03/PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:**

நான் கோடங்குடியில் வசித்து தனியார் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன மணிகண்டன் எங்களது ஊரில் அவரின் மாமனார் வீட்டில் தான் இருந்து வந்தார். அ .சா.1,2 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவரது வீட்டின் முன்பு தான் இந்த விபத்து நடந்தது. கடந்த 2021 டிசம்பர் மாதம் ஒருநாள் காலை சுமார் 09.00 மணியளவில் நான் கும்பகோணம் மெயின்ரோட்டில் நின்று கொண்டிருந்தபோது விபத்து நடந்ததாக கேள்விபட்டு நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு அ.சா.1,2 ஆகியோர் நின்று கொண்டிருந்தார்கள். மணிகண்டன்

இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தார். அவர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். நான் விசாரித்ததில் ஆஜர்எதிரி அந்த ரோட்டில் கடலையை காய வைத்து அதற்கு அருகில் கட்டையை வைத்திருந்ததாகவும் மணிகண்டன் இருசக்கர வாகனத்தில் ரோட்டில் சென்ற போது அந்த கட்டையில் மணிகண்டன் சென்ற இருசக்கர வாகனம் ஏறி விழுந்ததில் மணிகண்டனுக்கு மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு காரணம் ஆஜர் எதிரியின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் தான் காரணம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு/வி இல்லை.**

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.